**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE. TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 40 OF 2013**

**Deposition of Witness for : PW.15**

| | |
|---|---|
| **Name** | : திரு. வெங்கடேசன் |
| **Father's Name** | : ... |
| **Village** | : T.V.Malai |
| **Taluk** | : ... |
| **Caste** | : .. |
| **Calling** | : உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| **Religion** | : Hindu |
| **Age** | : 59 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 29-10-2020.**

முதல் விசாரணை.

நான் திருவண்ணாமலை கிழக்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். நான் கடந்த 13.6.2012ம் தேதி சிறப்பு ஆய்வாளராக தச்சம்பட்டு காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்த போது வாதி ரமேஷ், வயது 37 ,த/பெ.மன்னார் செட்டியார் என்பவர் , நிலையம் சேர்ந்து கொடுத்த புகார் மூலம் வாதி மன்னார்பாளையத்தில் தனது குடும்பத்துடன் வசித்து வருவதாகவும், அரசுப் பேருந்து ஓட்டுநராக பணி புரிந்து வருவதாகவும், தனக்கு வெங்கடேசன் என்ற தம்பி உள்ளதாகவும் , வெங்கடேசனுக்கு கடந்த 3 மாதத்திற்கு முன்பு தச்சம்பட்டை சேர்ந்த சக்கரவர்த்தி மகள் அம்பிகாவை திருமணம் செய்து வைத்ததாகவும், இருவரும் கூட்டுக்குடும்பமாக வசித்து வருவதாகவும், 2 மாதத்திற்கு முன்பாக அம்பிகாவின் தாயார் இறந்து விட்டதன் சம்மந்தமாக 13/2012ம் தேதி பகல் 12.30 மணிக்கு வாதியும் அவரது தம்பி வெங்டேசனும் துக்கம் சம்மந்தமாக தனது வீட்டின் எதிரே பேசிக்கொண்டிருந்த போது , அவ்வழியாக வந்த மன்னார்பாளையத்தைச் சேர்ந்த மன்னார் மகன் வீராசாமி , அவரது தம்பி ராஜாமணி இருவரும் வாதியின் வீட்டிற்கு வந்து வாதியை பார்த்து என் தங்கையின் செல்போன் நெம்பரை பெரியகள்ளப்பாடி

சேல்ஸ்மேனிடம் எப்படிக் கொடுத்தாய் என்று கேட்டுக் கொண்டிருந்த போது இருவருக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டு, அதற்கு வாதியின் தம்பி வெங்கடேசன் உன் தங்கை தான் சேல்ஸ்மேனிடம் அவரது நெம்பரை கொடுத்தார் என்றும், அதற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்ன போது வாதி குறுக்கிட்டு எதிரிகளிடம் எதுவாக இருந்தாலும் பிறகு பேசிக்கொள்ளலாம் என்று சொன்ன போது வீராசாமி தனது தம்பி ராஜாமணியிடம் தனது தங்கையை அழைத்து வரும் படி சொன்ன போது ராஜாமணி சம்பவ இடத்திற்கு அழைத்து வந்தார். பிறகு வாதியின் தம்பி நீ ஏன் செல்நெம்பரை சின்னதம்பியிடம் கொடுத்து விட்டு பொய் சொல்கிறாய் என்று சொன்னதால் வாய்த்தகராறு ஏற்பட்டு ராஜாமணி கீழே கிடந்த கருங்கல்லை வாதியின் தம்பி வெங்கடேசன் மீது குத்தியதால் ரத்தக்காயம் ஏற்பட்டு அது தொடர்பாக கொடுத்த புகார் மனுவை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ- 12 ஆகும்.** பின்பு வழக்கு கோப்புகளை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**. திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் உள்ள வெளிப்புற காவல் நிலையத்தில் இருந்து வெங்கடேசன் என்பவர் இறந்ததாக எவ்வித தகவலும் எனக்கு கிடைக்கப் பெறவில்லை என்றால் சரி. மன்னார்பாளையத்தில் இருந்து என்னுடைய காவல் நிலையம் வருவதற்கு இரண்டு சக்கர வாகனத்தில் வந்தால் 10 நிமிடத்தில் வந்து விடலாம் என்றால் சரி. இந்த வழக்கு சம்பவம் நடைபெற்று 5-30 மணி நேரம் கழித்து தான் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரி. 13.6.2012ம் தேதி மதியம் சுமார் 2.00 மணிக்கு நான் நிலத்தில் தண்ணீர் பாயச்சி வநத போது வீராசாமி அவருடைய தம்பி ராஜாமணி அவர்கள் இரண்டு சக்கர வாகனத்தில் வந்து எதிரே வந்து உன் தம்பியை அடக்கமாட்டாயே என்று மதியம் 2.00 மணி அளவில் கூறிய விவரத்தை புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரி. வெங்கடேசன் அணிந்திருந்த சட்டை , லுங்கி ஆகியவற்றில் ரத்தம் தோய்ந்திருந்து

என்று குறிப்பிட்டு புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரி. இவனை அடித்துக் கொள்ளுடா என்று வீராசாமி, ராஜாமணியிடம் கூறியதாக புகார் மனுவில் இல்லை என்றால் சரி. எதிரிகள் சுட்ட அரை செங்கற்கலாலும், ஜல்லி கல்லாலும் வெங்கடேசனை தாக்கியதாக புகார் மனுவில் இல்லை என்றால் சரி. புகார் கொடுத்த ரமேஷ் 13.6.2012 மதியம் 12.00 மணிக்கு கொடுத்த புகார் மனுவை நாங்கள் மறைத்து விட்டோம் எனறு சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் அ.த.சா.ஆ. 1 புகார் மனு வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட சான்றாவணம் என்று சொன்னால் சரியல்ல. புகார் மனுவில் இறந்து போன வெங்கடேசனுக்கு அவர் இறந்து போன 3 மாதத்திற்கு முன்பு தான் திருமணம் நடந்தது என்று புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளது என்று சொன்னால் சரி. இறந்த வெங்கடேசன் அவரது திருமண வாழ்க்கையில் சந்தேகங்கள், பல பிரச்சினை காரணமாக தான் அவருக்கு இறப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. புகார்தாரரும், எதிரிகளும் பங்காளிகள் அதனால் அவர்களுக்குள் ஏற்கனவே முன்விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. அந்த முன்விரோததிதை மனதில் கொண்டு பழி வாங்க வேண்டும் என்ற தீய எண்ணத்தில் கொடுக்கப்பட்ட பொய் புகார் என்று சொன்னால் சரியல்ல. அந்த பொய் புகாரை பெற்று எதிரிகள் மீது பொய்யாக புகார் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இறந்து போன வெங்கடேசனுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஒரு பொய் புகாரின் பேரில் தவறரான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை </u>. இல்லை

ஒப்பம்/- வெங்கடேசன்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- C. Thirumagal,
Principal Sessions Judge,
Tiruvannamalai.